Drinking water supply for flats in Foreshore Estate.

* 640 Q.—THIRU N. V. GURUSAMI : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(a) whether there is any proposal under consideration to provide tap connections for the supply of drinking water for all the flats under the Low Income Group scheme in the Foreshore Estate; and

(b) if so, the present stage thereof ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) ஆம்.

(இ) பட்டினப்பாக்கத்தில் உள்ள குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கான குடியிருப்புகளுக்குத் தனித்தனியாகக் குழாய்கள் அமைத்து குடிதண்ணீர் வழங்குவதற்கான வேலை நடைபெற்று வருகிறது. மாநகராட்சியின் குடிதண்ணீரைச் சேமித்து வைக்கவும், மேல்நிலைத் தொட்டிக்குத் தண்ணீரை மேலேற்றவும், இரு தொட்டிகள் பூமி மட்டத்தில் கட்டிமுடிக்கப் பட்டுவிட்டன. தேவையான பம்பு செட்டுகளும் சேகரிக்கப்பட்டு விட்டன. குடியிருப்புகளுக்குக் குடிதண்ணீர் வழங்க சென்னை மாநகராட்சியையும், இயந்திரங்களுக்கு மின்சாரம் வழங்கு வதற்காக சென்னை மின்சார வாரியத்தையும் விட்டுவசதி வாரியம் கேட்டுக்கொண்டுள்ளது. கூடிய சீக்கிரத்தில் இவ்வேலை முடிந்து விடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

THIRU K. M SUBRAMANIAM : Sir, although we appreciate the arrangements that are being made, I want to know whether there is any possibility of getting sufficient quantity of water for all these purposes ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, மாநகராட்சியோடு அது சம்பந்தமாகப் பேசி முடிவு செய்யப் பட்டிருக்கிறது. தண்ணீரைத் தேக்கிவைப்பதற்காக ஸ்லம்ப்கள் ரூ. 88,530 செலவில் கட்டப்பட்டிருக்கின்றன. அதற்கான வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன. விரைவிலே 663 வீடுகளுக்குத் தண்ணீர் வழங்குவதற்கான வேலைகள் எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு :** ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப் பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]